**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.37/2019**

**PW9**

| | | |
|---|---|---|
| **Name** | : | வேல்முருகன் |
| **Father's Name** | : | சுப்பிரமணி |
| **Village** | : | அய்யம்பாளையம் |
| **Taluk/District** | : | திருவண்ணாமலை |
| **Caste** | : | -------- |
| **Calling** | : | |
| **Religion** | : | --------- |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2026.

A1, 2 , 4 to 11, 13, 15, 16 present. A12, A17 absent. Petition u/s 317 crpc allowed.

**முதல் விசாரணை**

நான் அய்யம்பாளையம் கிராமத்தில் வசித்து அரசு கலைக்கல்லூரியில் கௌரவ விரிவுரையாளராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எந்த வழக்கிற்காக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. நேற்று வாட்ஸ்அப் மெசேஜ் வந்ததால்தான் நான் வந்துள்ளேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் எனது அக்கா சுமதி கோட்டாங்கல் கிராமத்தில் வசித்து வருவதாகவும் அவரை பார்க்க நான் தினமும் சென்று வருவேன் என்றும், அப்போது 01.05.2013 அன்று இரவு சுமார் 10 மணி அளவில் நான் என் அக்காவை பார்க்க கோட்டாங்கல் கிராமம் சென்றேன் என்றும் அப்போது கோட்டாங்கல் வாட்டர் டேங்கிடம் ஆஜர் எதிரிகள் முருகன், பன்னீர்செல்வம், பார்த்திபன், கோவிந்தசாமி, பட்டுசாமி, ஏழுமலை, பால்கார் ரவி, ரமேஷ், அண்ணாமலை மகன் ஏழுமலை, மணி, பரமசிவம், சம்பத்,

செல்வம், விஸ்வநாதன், ராமச்சந்திரன், அல்லிமுத்து மகன் மணி, ஆகியோர்கள் டேங்க் அருகில் இருந்தார்கள் என்றும், அப்போது அவர்களுக்குள் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் அவர்களை கைது செய்தது சம்மந்தமாக நாம் கலவரம் செய்ய வேண்டும் என்றும் திருவண்ணாமலை செங்கம் தேசிய நெடுஞ்சாலையில் வரும் வாகனத்தை வழி மறித்து கலவரம் செய்யவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அதைப்பார்த்து நான் அங்கிருந்து சென்றுவிட்டேன் என்றும் பின்னர் 02.05.2013 அன்று அதிகாலை எங்கள் ஊர் பக்கமுள்ள அத்தியந்தல் ஏரிக்கரையிடம் 1 மணி அளவில் அரியானா மாநிலத்தை சேர்ந்த HR 55 N 6976 என்ற பதிவெண் கொண்ட கண்டெயினர் லாரியை குண்டு வீசி தீ வைத்து எரித்தார்கள் என்றும் லாரி டிரைவர் தீக்காயங்களுடன் மருத்துவமனை சென்று சேர்ந்தார் என்றும் இது சம்மந்தமாக தாலுக்கா காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - </u>**<u>இல்லை.</u>

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.